நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.68 /2020

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | மாத்தூர் |
| வட்டம் | : | அந்தியூர் |
| மாவட்டம் | : | ஈரோடு |
| சாட்சி வரிசை எண் | : | **PW 5** |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 25–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.47PM)

1. நான் தற்போது வனச்சரக அலுவலராக ஆசனூர் வனக்கோட்டம் சூழல் மேம்பாட்டு வனச்சரகராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 14.12.2019 ம் தேதி காலை சுமார் 7 மணி அளவில் குரும்பனூர் வடக்கு பீட் பெரியதண்டா சங்கரன் காட்டு ஓடை பகுதியில் யானை ஒன்று இறந்து கிடப்பதாக கிடைக்க பெற்ற

தகவலை உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு வனவர், குரும்பனூர் வடக்கு பீட் வனக்காப்பாளுருக்கும் கிடைக்க பெற்ற தகவலின்அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தபோது சங்கரன் காட்டு ஓடை போறம்போக்கு நிலம் புலை எண். 440 தங்கவேல் சுமார் வயது 70 த/பெ பெரியசாமிகவுண்டர் கீமியான்காடு என்பவரது அனுபவத்தில் உள்ள பொறம்போக்கு நிலத்தில் மின்சாரம் பாய்ச்சி இறந்து கிடந்த ஆண் யானையினை பார்த்து உடனடியாக வனச்சரக அலுவலர் மற்றும் மின்சார துறை மின்வாரிய அலுவலர் இலக்கம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்த பின்பு இறந்த யானையை சோதனை செய்து பார்த்தோம்.

2. சோதனையில் SC எண். 243 ல் இருந்து மின்சாரம் எடுத்து கட்டுகம்பி வாயிலாக மின்சாரம் பாய்ச்சி யானையானது இறந்து உள்ளது என மின்வாரிய அலுவலரால் உறுதி படுத்தப்பட்ட பின்பு அங்கு தேடிப் பார்த்ததில் புதர் மறைவில் வேம்பு மற்றும் புருசு குச்சிகளும், கட்டுக்கம்பி சுமார் 5 கிலோ அளவில் கைப்பற்றப்பட்டது.

3. சம்பவ இடத்தில் மாவட்ட வனஅலுவலர் ஓசுர் கால் நடை மருத்துவர் சின்னதண்டா கால்நடை மருத்துவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் முன்னிலையில் யானையினை பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரதே பரிசோதனையில் மின்சாரம் பாய்ச்சி இறந்ததனால் தசை நார்கள் கருகியும், இதய பகுதி கருகிய நிலையிலும் இருப்பது ஸ்தலத்திலேயே மருத்துவரால் உறுதி படுத்தப்பட்டது.

4. மேலும் யானை பட்டியல் 1 பகுதி1 வரிசை எண் 12B ல் வரும் இந்திய யானை என்பதால் வன உயிரன பாதுகாப்பு சட்டம் 2(5),2(14), 2(16), 9, 39, 50 மற்றும் 51(1)ன் படி தண்டனைக்குரிய குற்றம் என்பதால் எதிரியை கீமியான் காட்டு அவர் வீட்டுக்கு சென்று பார்த்தபோது அவர் வீட்டை பூட்டி விட்டு சென்றுவிட்டார்.

5. யானை பிரேத பரிசோதனை செய்யப்பட்ட ஸ்தலத்தில் வனவரால் ஸ்தல மகஜர்

தயார் செய்தும், வனக்காப்பாளரால் எச் நமூனா எண். 0109782 ல் பதிவு செய்தும் சம்பவ இடத்தை காட்டும் வரபைடம் தயார் செய்தும், குற்ற அறிக்கை 14 ன்படி மேட்டுர் வனச்சரக அலுவலகத்திற்கு யானையின் தந்தம் , புருசு மற்றும் வேம்பு குச்சிகள் 10 (No), கட்டுக்கம்பி சுமார் 5 கிலோ அலுவலகம் எடுத்து வரப்பட்டது.

6. எதிரியை தேடி வந்த நிலையில் 16.12.2019 ம் தேதி மாலை சுமார் 5.00 மணி அளவில் எதிரி மேட்டுர் வனச்சரக அலுவலகத்தில் ஆஜர் ஆகி யாருடைய வற்புறுத்தல் இன்றி தன்னிச்சையான குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தரும்போது வனவரால் பதிவு செய்யப்பட்டது. வனச்சரக அலுவலரால் எதிரியை வனஉயிரின குற்றம் பிரிவு 50 ன் படி எதிரியை கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் அவரது நிலத்தில் மக்காசோளம் பயிரிட்டு உள்ளதாகவும், அவரின் ஆக்கரமிப்பில் இருந்த புறம்போக்கு நிலத்திலும் பயிரிட்டு இருந்த நிலையில் அதனை காட்டு பன்றிகள் சேதப்படுத்தி வருவதால் 14.12.2019 ம் தேதி புருசு மற்றும் வேம்பு குச்சிகளை நட்டு அதில் கட்டுக்கம்பியினை கட்டி அவரது இலவச மின்சார இணைப்பு எண் 243 ல் இணைத்து மின்சாரம் பாய்ச்சி இருந்ததாகவும் ஈரோடு மாவட்டம் சென்னம்பட்டி வனச்சரக வன எல்லை பகுதியில் இருந்து உணவு தேடி வந்த காட்டு யானை மின்சாரம் கம்பியில் பட்டு இறந்து விட்டதாக கூறினார்.

7. மேலும் யானை அதிகாலையில் இறந்து விட்டதை கண்டு கட்டுக்கம்பிகளையும் குச்சிகளையும் பிடுங்கி புதர் மறைவில் போட்டுவிட்டு செய்வது அறியாது அங்கு இருந்து தப்பியோடிவிட்டதாகவும், எனது வீட்டின் கீமியான் காட்டு பகுதிக்கு வந்த வன அதிகாரிகள் அக்கம் பக்கத்தில் உள்ள நபர்களிடம் குற்றம் நடைபெற்றது குறித்து கூறி அலுவலகத்தில் ஆஜராக அறுவுறுத்தியதால் ஆஜர் ஆணை என்ற தன்னிலை விளக்கத்தினை கூறினார்.

8. எதிரியினை விசாணை மேற்கொண்டு பின்பு பிடிப்பொருட்களையும், எதிரியையும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்1 ல் ஆஜர் செய்து நீதிமன்ற நடுவர் அவர்களின் ஆணை பெற்று சேலம் சிறையில் அடைப்பு காவலில் வைக்கப்பட்டது.

9. மேலும் பிடிப்பொருட்களை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 17.12.2019 ம் தேதி ஆஜர் செய்து CP எண். 103/2019 பெற்று நீதிமன்ற நடுவர் அவர்களின் உதத்ரவு பெற்று பிடிப்பொருட்களை வனச்சரக அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

10. மேற்கண்ட நிகழ்வானது வனச்சரகஅலுவலர் பரசுராமமூர்த்தி கூடுதல் பொறுப்பாக மேட்டுர் வனச்சரகத்தில் பணி புரிந்தபோது நடந்த நிகழ்வினை பயிற்சிக்கு சென்ற 12.01.2020 ல் மீண்டும் மேட்டுர் வனச்சரகத்தில் பணியில் சேர்ந்த பின்பு மேற்கண்ட நிகழ்வுகள் குறித்து புலன் விசாரணை மேற்கொண்டு 24.02.2020 ல் என்னால் அ படிவம் நீதிமன்றத்தில் நடுவர் அவர்களிடம் சமர்பிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தற்போது இல்லையென தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.19PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**